**IN THE COURT OF II ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, THANJAVUR**

**DEPOSITION OF WITNESS**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Case No | : | SC.212/2017 | Village | : | |
| Prosecution witness | : | PW-9 | Taluk | : | |
| Name | : | திரு. ராமசந்திரன் | Occupation | : | |
| Father Name | : | திரு. | Age | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 of the day of 9.9.2025**

Both accused present.

அரசு தரப்பில் முதல் விசாரணை:

நான் தற்போது தஞ்சாவூர் மாவட்ட காவல்அலுவலகத்தில் உள்ள இயங்கும் தடய அறிவியல் கூடத்தில் உதவி இயக்குநராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 13.6.2017 அன்று வட்டார தடய அறிவியல் ஆய்வளம் தஞ்சாவூரில் அறிவியல் அலுவலராக பணியில் இருந்தபோது தஞ்சாவூர் மருத்துவ கல்லூரி மருத்துவமனை சட்ட மருத்துவ துறை பேராசிரியர் மற்றும் போலிஸ் சர்ஜன் அவரிடமிருந்து 665/2017 என்ற பிண பரிசோதனை எண் கொண்ட வேண்டுகோள் கடிதம் கிடைக்கபெற்றது அக்கடிதத்தில் தஞ்சாவூர் தெற்கு காவல்நிலைய கு.எண் 155/2017 தொடர்புடைய வழக்கில் இறந்துபோன 38 வயதுடைய ரமேஷ் என்பவரின் மாதிரி இரத்தத்தை குருதி வடிநீரியல் ஆய்வுக்கு அனுப்பி வைத்திருப்பதாகவும் அவற்றை ஆய்வுக்கு அனுப்பி வைக்கும்படி தெரிவிக்கபட்டிருந்தது. அப்பணிக்கு அப்போதைய பெண் தலைமை காவலர் 2017 திருமதி தனலெட்சுமி என்பவர் நியமிக்கபட்டிருந்தார். அவர் மூலம் பெறபட்ட தடயம் சரியாக மூடி முத்திரையிடபட்டு இருந்தது. அந்த தடயமானது சென்னையில் உள்ள தடய அறிவியல் துறையின் குருதிவடிநீரியல் பிரிவுக்கு ஆய்வுக்காக அனுப்பிவைக்கப்பட்டது. இது தொடர்பான விபரம் கடந்த 11.7.2017 அன்று மேற்குறிப்பிட்ட பெண் தலைமை காவலர் திருமதி தனலெட்சுமி மூலம் தொடர்புடைய சட்ட மருத்துவதுறைக்கு அனுப்பி வைக்கபட்டது. இந்த வழக்கின் தொடர்ச்சியாக கடந்த

27.6.2017 அன்று மாண்புமிகு நீதித்துறை நடுவர் எண் 1, தஞ்சாவூர் அவர்களிடமிருந்தது 1264 என்ற கடித எண் கொண்ட வேண்டுகோள் கடிதம் கிடைக்கபெற்றது அக்கடிதத்தில் இந்த வழக்கில் கைபற்றபட்ட கீழ்கண்ட தடயங்கள் சரியான முத்திரைகளுடன் மேற்குறிப்பிட்ட பெண் தலைமை காவலர் திருமதி தனலெட்சுமி என்பவர் மூலம் அனுப்பி வைத்திருப்பதாகவும் அவற்றை ஆய்வு செய்து ஆய்வறிக்கை அனுப்பி வைக்கும்படி கேட்கபட்டிருந்தது தடய பொருட்களின் விபரம்

1) உடைந்த நிலையில் உள்ள கரும்பழுப்பு நிற கரைகளுடன் கூடிய கான்கீரிட் துண்டு ஒன்று.

2) உடைந்த நிலையில் உள்ள கரும்பழுப்பு நிற கரைகளுடன் கூடிய கான்கீரிட் துண்டு ஒன்று.

3) சிதைந்த நிலையில் உள்ள சாம்பல் நிற பருத்தியினால் ஆன கையில்லாத பனியன் ஒன்று அதில் ஆழ்ந்த கரும்பழுப்பு நிற கறைகள் காணபட்டன.

4) சிதைந்த நிலையில் உள்ள சாம்பல் நிற பருத்தியினால் ஆன முழுக்கால் சட்டை ஒன்று. அதில் கரும்பழுப்பு நிற கறைகள் காணபட்டன.

5) கிழிந்த நிலையில் நீல நிற பருத்தியினால் ஆன துண்டு ஒன்று அதில் கரும்நீல நிற மற்றும் வெள்ளை நிற குறுக்குகோடுகளும் கரும்பழுப்பு நிற கறைகளும் காணபட்டன.

6) வெள்ளை நிற பருத்தியினால் ஆன சட்டை ஒன்று அதில் பச்சை நிற குறுக்குகோடுகள் பல வண்ண நிறங்களுடன் கூடிய துணி துண்டுகள் தைக்கபட்ட நிலையிலும் கரும்பழுப்பு நிற கறைகளுடன் காணபட்டன.

7) வெள்ளை நிற பருத்தியினால் ஆன வேஷ்டி ஒன்று அதில் கருநீலம் நிற ஓரக்கோடுகளும் கரும்பழுப்பு நிற கறைகளும் காணபட்டன.

8) இரண்டு பகுதிகளாக காணபட்ட சுமார் 49 செ.மீ நீளமுள்ள வால் ஒன்று அதில் கரும்பழுப்பு நிற கறைகள் காணபட்டன.

அந்த தடயங்களை 29.4.2017 அன்று அப்போதைய துணை இயக்குநர் திருமதி டி.சித்ரா அவர்கள் முன்னிலையில் ஆய்வு செய்ததில் மேற்கண்ட 1 முதலான 8 தடயங்களிலும் இரத்தம் கண்டறியபட்டது. இரத்தம் கண்டறியபட்ட 8 தடயங்களிலும் இரத்த மாதிரிகள் எடுக்கபட்டு அவை எந்த இனம் மற்றும் வகை என்பதை கண்டறிய சென்னையில் உள்ள தடய அறிவியல் துறை குருதி வடிநீரியல் பிரிவுக்கு அடுத்த கட்ட

ஆய்விற்காக அனுப்பி வைக்கபட்டது. இது தொடர்பான ஆய்வறிக்கை மற்றும் ஆய்வுக்கு பின் எஞ்சிய தடயங்கள் கடந்த 11.7.2017 அன்று மேற்குறிப்பிட்ட பெண் தலைமை காவலர் திருமதி தனலெட்சுமி அவர்கள் மூலம் தொடர்புடைய நீதிமன்றத்திற்கு திருப்பி அனுப்பி வைக்கபட்டது. இது தொடர்பான குருதி வடிநீரியல் பிரிவில் 28.7.2017 தேதியிட்ட ஆய்வறிக்கை நகல் கடந்த 2017 ஆம் வருடம் செப்டம்பர் 18 அன்று கிடைக்கபெற்றது. இந்த ஆய்வறிக்கை நகலில் இரத்தம் கண்டறியபட்ட 8 தடயங்களுள் 1, 2, மற்றும் 3இல் இருப்பது சிதைந்துவிட்டது என்றும், தடயம் 4, 5, 6, 7 மற்றும் 8 இல் இருப்பது மனித இரத்தம் என்றும் அதில் எந்த வகை என்று அறுதியிட்டு தெரிவிக்க முடியவில்லை என்றும் தெரிவிக்கபட்டுள்ளது. போலிஸார் என்னை விசாரித்தார்கள். நான் காவல் அறுவை மருத்துவருக்கு அனுப்பிய அறிக்கை **அ.த.சா.ஆ.11** ஆகும். நீதித்துறை நடுவர் எண்1 க்கு அனுப்பிய அறிக்கை **அ.த.சா.ஆ.12** ஆகும். என்னால் பெறபட்ட குருதி வடிநீரியல் அறிக்கை அறிக்கைபோல் நீதிமன்றத்திற்கு அசல் அனுப்பப்பட்டுள்ளது அந்த அறிக்கை **அ.த.சா.ஆ.13** ஆகும்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>

இல்லை.

நான் சொல்ல என் உத்திரவுப்படி
தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,
மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்/- ப ,நாகராஜன்)
2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.